KATHA

குழந்தைகளுக்கான புத்தகங்கள்

# அட்டவணை 2026



books.katha.org


வெவ்வேறு
வயதினருக்கான கதைகள்
இளம் வாசகர்களை
புத்தக வாசிப்புக்கு ஈர்த்து,
மகிழ்வித்து, கல்வி கற்க
ஊக்குவிக்கும். கதையின்
மாயத்தை அனுபவியுங்கள்,
கதாவின் மாயத்தை
அனுபவியுங்கள்...
இந்தியா எப்போதுமே கதை சொல்லிகளின்
பூமி."கதா" அல்லது கதை என்பது ஒரு
மதிப்புமிக்க பாரம்பரியமாகும், இது வாய்வழி
மரபுகளிலிருந்து எழுதப்பட்ட நூல்களாகவும்,
கேட்ட வார்த்தையிலிருந்து படிக்கும்
வார்த்தையாகவும் மாறியுள்ளது. இன்று,
மென்பொருளும் பல்லூடகமும் செழிக்கும்
உலகில், கலாச்சார ரீதியாக தனித்துவமான
குழந்தைகள் இலக்கியங்களை வெளியிடுவதன்
மூலம் கதா நமது சிறந்த கதை சொல்லல்
மரபுகளை உயிர்ப்புடன் வைத்திருக்க உழைக்கிறது.
கதாவின் குழந்தைகள் வெளியீட்டுத் திட்டம்
இளம் மனங்களை ஈர்க்குமாறு ஆழமாக
ஆராயப்பட்ட கதைகளுடன் வாசிப்பு முயற்சிகளை
மேம்படுத்துகிறது. எங்கள் புத்தகங்கள்
நம் சொந்த நாட்டின் பல்வேறு பிராந்திய
தாக்கங்களையும், பல்வேறு வயதினருக்கான
சர்வதேச பெஸ்ட்செல்லர்களையும் குழந்தைகளுக்கு
அறிமுகப்படுத்துகின்றன. எங்கள் புத்தகங்கள்
அனைத்தும் தமிழ், ஆங்கிலம் மற்றும் இந்தி ஆகிய
மும்மொழிகளில் வெளியிடப்படுகின்றன, இது
குழந்தைகளின் சொற்களஞ்சியத்தையும் கற்பதற்கான
திறனையும் மேம்படுத்துகிறது.
கதா எழுத்து மற்றும் விளக்கக்காட்சியில் சிறந்த
குழந்தைகளைக் கண்டறிந்து பாராட்டுவதற்காக கதா
சித்திர கலா விருது என்று ஒரு சிறப்பு
முயற்சியையும் நடத்துகிறது.




## பூமி பிறந்த அதிசயம்!

ரோகிணி சிந்தா

ஜஸ்லின் கவுரின்

ஒரு காலத்தில் தூசி மற்றும் வாயு நிறைந்த ஒரு மேகம் இருந்தது. அந்த மேகத்துக்கு சுழலுவது மிகவும் பிடிக்கும். அது வானத்தில் தொடர்ந்து சுழன்றுக்கொண்டே இருந்தது.

ஒரு நாள் – பூம்ம்ம் ம்!

அது துண்டு துண்டாக உடைந்தது. ஆனால் அந்த உடைதல் ஒரு முடிவு இல்லை – அது புதிய உலகங்களின் ஆரம்பம்!







உங்களுக்காகப்
புதிதாக!




## ராமுவம் சைக்கிளும்

### வாங்காட்டி பாண்டுரங்க ராவ்

### ஆலன் ஷா

ஏழு நாள் முழுவதும் சைக்கிள்களைப் பற்றித்தான் கனவு காண்கிறான். அவனும் ஒரு நாள் சைக்கிள் ஓட்டக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் அவன் ஆசை! கற்றுக்கொள்ள முயற்சி செய்தபின் – வழுக்கல்... தடுமாற்றம்... கீழே விழுதல்... ஆனால் அதற்குள் ஒரு மந்திரம்! முயற்சி செய்வதும், தோல்வியடைவதும், மீண்டும் மீண்டும் முயல்வதும், இறுதியாக ராமு பரிக்கும் அந்த அற்புத நொடையையும் பற்றிய ஒரு மகிழ்ச்சியான கதை.

# விரைவில்





## அலையும் அலையின் சாகசங்கள்

### கீதா தர்மராஜன்

### ஸ்ரீஜா பாசுவின் கலை

இப்பாடல் கதாவின் கடற்கல்வித் தொடரில் ஒரு புதிய ரத்தினம். இது காணாமல் போன தன் நண்பியைத் தேடி செல்லும் அலையின் துருதுடுக்கும் சலசிலீர்க்கும் சாகசங்களை கொஞ்சும் தமிழில் மின்னுகிறது. பிரமிக்க வைக்கும் மெஜந்தா பாம்பு மற்றும் உற்சாகம் ஊட்டும் மிட்டாய் மலை வழியாக இந்த விளையாட்டுத்தனமான பயணம், இளம் வாசகர்களை ஒரு பெரிய சாகசத்திற்கு நிச்சயம் அழைத்து செல்லும்.







## ஜாகிர் ஹுசைன்: சிறுவயதில் இருக்கும்போது

### கீதா தர்மராஜனின் பேட்டியின் அடிப்படையில் அவினாஷ் பஸ்ரீசாவின் புகைப்படங்கள்.

தொண்ணூறுகளில் இருந்து கீதா தர்மராஜனுடன் ஒரு பிரத்யேக நேர்காணலில் சிறுவயதில் இருந்து தனது இசை அனுபவங்களை விவரிக்கும் போது, பிரபல தபலா மேஸ்ட்ரோ ஜாகிர் ஹுசைனின் மந்திர இசைகளுடன் கலந்துக்கொள்ள கதா உங்களை அழைக்கிறது. இந்த நேர்காணல் முதலில் டார்கெட் இதழில் வெளியிடப்பட்டது. அவினாஷ் பஸ்ரீசாவின் அசத்தலான புகைப்படங்களுடன் நேர்காணலை உங்களுக்குக் கொண்டுவருகிறது கதா.





## காட்டு டாக்டர் கல்யாணி

### கீதா தர்மராஜன்

### போஸ்கி ஜெயினின் கலை

தான் காக்கும் உயிரினங்கள போலவே துருதுருனு இருக்கும் காட்டு டாக்டர் கல்யாணிக்கு இன்னொரு வேலை வந்திருக்கு! கல்யாணி மரங்களுல ஏறி கொடிகளுல ஆடி தன் பிரெண்ட்ஸோட பிரச்சனைகள தீக்கற நிலகிரிக்கு அழைத்து செல்கிறது இந்த அற்புதக் கவிதை. தன்ன நம்பி இருப்பவர காக்கும் ஒரு பெண்ணோட வீரம், நட்பு, உறுதி அனைத்தையும் குறும்புத்தனமா கொண்டாடுறது.







## இருளுக்கு உயிர் உண்டு

மம்தா நைனி

உபாஸ்னா அகர்வாலின் கலை

**“இருளுக்கு உயிர் உண்டு,” என்றார் பாட்டி.**
**“நாம் இருளர்கள், இருளின் பழங்குடி.”**

இந்தியாவின் பழமையான ஆதிவாசி சமூகங்களில் ஒன்றான இருளர்களின் பூர்வீக ஞானம் மற்றும் விரித்திரனிலிருந்து உத்வேகம் கொள்கிறது இப்புத்தகம். இது ஆழ்ந்த இருண்ட காட்டுக்கும் அதில் வசிப்பவர்களுக்கும் அர்ப்பணிக்கப்பட்ட வரி படைப்பு.




## தந்திரக்காரன் ஒரு முறை எனக்கு ரெண்டு நிலவுகள பாக்க ஆசை

மீனாட்சி பரத்வாஜின் மறுவிற்பனை

சார்பக் திப்தாவின் கலைலை

ஒருமுறை, ஒரு மாயக் கவை எலும்புடன், ஒரு குறும்புக்கார தந்திரக்காரன் இரண்டு நிலவுகளை வானத்தில் அனுப்பினான். ஆனால் கிராம மக்கள் வானத்தைப் பார்த்தபோது என்ன நடந்தது? தந்திரத்தை அவர்களால் பார்க்க முடியுமா?

பூர்வீக அமெரிக்க இந்திய புனைவுகளில் இருந்து அழகாக வடிவமைக்கப்பட்ட இக்கதை, உங்களை மந்திரம், குறும்புகள், கட்டுக்கதைகள் அனைத்தும் குவிந்திருக்கும் உலகில் பயணிக்க அழைக்கிறது.








## மரத்தைத் தேடி

**கீதா தர்மராஜன்**

**ராஜீவ் ஐப்பின் கலை**

**உங்கள் நண்பரை இழந்தால் என்ன செய்வீர்கள்? உங்கள் நண்பரை கண்டுபிடிக்க எவ்வளவு தூரம் பயணிப்பீர்கள்?**

நாச்சி தன் தொலைந்துபோன நண்பியான மரத்தை தேடி கண்டுபிடிக்க இவ்வுலகை தாண்டி தொலைதூரத்திற்கு செல்கிறாள். பல மாயாஜால மனிதர்களையும் பிராணிகளையும் சந்திக்கிறாள். ஏன், மரணத்தின் கடவுளான எம்மொராசாவையே பார்க்கிறாள். நாச்சியுடன் சேர்ந்து அன்பையும் இழைப்பையும் பற்றி இந்த மயக்கதையில் கற்றுக்கொள்ளுங்கள்.








## இருட்டில் பூனை

**மார்கரெட் மேஹி**

**அன்வாத்யா கத்ரியின் கலை**

புகழ்பெற்ற ஹான்ஸ் கிரிஸ்டியன் ஆண்டர்சனின் எழுத்துக்கான பதக்கம் மற்றும் இரண்டு விரும்பப்படும் கார்னகி பதக்கங்களின் வெற்றியாளர் மார்கரெட் மேஹி உலகின் ஒரு மென்மையான எழுத்தாளராக போற்றப்பட்டவர். இப்போது, இதோ அவளுக்குப் பிடித்த ஸ்னீக்கி-பீக்கி பூனை கவிதை - ஒவ்வொரு குழந்தைக்கும். உங்கள் இளம் புத்தக காதலருடன் இந்த விளையாட்டுத்தனமான புத்தகத்தை அனுபவிக்கவும்!



# ஐ லவ் ரீடிங் புத்தகங்கள்

இது முதல் தலைமுறை வாசகர்களை பொழுதுபோக்கிற்காகவும் அர்த்தத்திற்காகவும் புத்தகம் வசிப்பதற்கு ஈர்க்கும் தனித்துவமான தொடர். இந்தத் தொடரில் உள்ள புத்தகங்கள், அவற்றின் உயர்தர உள்ளடக்கம் மற்றும் குழந்தைகளின் கற்றல் தேவைகளுடன் பொருந்தக்கூடிய வடிவமைப்புடன், இந்தியாவின் 2000 ஆண்டு இலக்கிய பாரம்பரியத்தை கலந்து வழிகாட்டி வசிப்பதற்கு, மலிவு விலையில் குழந்தைகளுக்கு கொண்டுவர முயற்சி செய்கின்றன - கல்வியும் வாசிப்புத்திறனும் எல்லோரும் அடையும்படி செய்ய ஒரு கதா வழி.



வயலட் தொகுப்பு

# நண்பர்களுடன் மகிழ்ச்சி

0 - 60

சொல் கதைகள்




## ரங்கா

### கீதா தர்மராஜன்

### ஸ்ரீவியின் கலை

காண்டாமிருகம் பற்றிய சுவாரசியமான தகவல்களை கதா உங்களுக்கு கொண்டு வருகிறது. ஸ்ரீ வியின் கற்பனையான சித்திரத்தை ரசிக்கும் சிறு குழந்தைகளுக்குக்கான பொக்கிஷம் இது.




## நிலா, நிலா!

இந்தத் தொகுப்பில் நிலாவின் அழகை வர்ணிக்கும் அழகான நிலவு பற்றிய பாடல் வரிகளை காணலாம். நிலவின் மர்மங்களை ஆராய கதா உங்களை இக்கதையின் மூலம் அழைத்துச் செல்கிறது.




## மழையில் இரயில்!

### கீதா தர்மராஜன்

### சுதிப்தா குண்டுவின் கலை

மழையில் ரயில் புத்தகத்தின் வழியாக கீதா தர்மராஜன் அவர்கள் வித்தியாசமான ஒலிகளை குழந்தைகளுக்கு நகைச்சுவையாக கொண்டு சேர்க்க விரும்புகிறார்.






## ருக்மா!

### கீதா தர்மராஜன்

### வந்தனா பிஸ்டின் கலை

பேரலைகள் நிறைந்த கடலோடு நட்புக் கொண்ட ஒரு சிறுமியைப் பற்றி வர்ணிக்கிறார் கீதா தர்மராஜன். இதில் அவர் ஆழ்கடலின் சிறப்புகளையும் வளங்களையும் கடல் வாழ் மக்களை பற்றியும் நமக்கு சொல்ல விரும்புகிறார்.




## ஹசீனாவின் நண்பன்

### கீதா தர்மராஜன்

### தபஸ் குஹாவின் கலை

ஒருமுறை ஹசீனாவும் அவளோட நண்பனும் வானத்தில் நிகழ்த்திய சாகசங்களையும் அவளோட ஆசையையும் இந்த கதையில் பார்ப்போம். அதோடு உழவர்களின் சிறப்புகளையும் அவர்களின் வாழ்க்கை முறையையும் பற்றி கற்றுக்கொள்கிறோம்.




## ஒரு பரபரப்பான நாள்!

### ஜேயின் கலை

எந்த செயலை செய்யும் போதும் மிக அவசரமாகவும் பரபரப்பாகவும் செய்யும் பொழுது அந்த விஷயத்தை நம்மால் சரியாக செய்து முடிக்க முடியாது. நம் முன்னோர்கள் கூறியது போல"பதறிய காரியம் சிதறும்" "சிந்தித்து செயல்படு" என்பதனை குழந்தைகளுக்கு பிடித்த தாத்தா மூலம் இக்கதை கூறப்பட்டிருப்பது இக்கதையின் சிறப்பு அம்சமாகும்.




## என்றென்றும் புலிகள்!

### ரஸ்கின் பாண்ட்

### டேவிட் ஸ்ட்ரிபிளிங்கின் கலை

வரியுடைய வனமகன் வனப்பாதுகாவலன் என்றெல்லாம் உலகில் பரவலாக அறியப்படும் பெரும் விலங்கினம் புலிகள். அப்படிப்பட்ட விலங்கினம் தற்போது அழிந்து வருகிறது. அவற்றை பாதுகாக்கும் நோக்கில் இக்கதை சிறப்பாக அமைந்துள்ளது.




## மிருகக்காட்சி சாலையில்!

### அநாமிகா

### சௌம்யா மேனனின் கலை

சுதந்திரம் என்பது இவ்வுலகில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் பொதுவானது. மனிதர்களுக்கு மட்டும் சுதந்திரம் என்பது அல்ல, பூமியில் வாழும் பறவைகள் விலங்குகள் அனைத்திற்கும் சுதந்திரம் என்பது முக்கியமானதாகும். கூட்டில் அடைத்து வைத்து தேவையான அனைத்தையும் கொடுத்தாலுமே நம்மால் சந்தோஷத்தை கொடுக்க முடியாது. விரும்பும் இடத்தில் வாழ்ந்து பிடித்த உணவை உண்டு வாழ்வதே சுதந்திரம் ஆகும். நம் அன்பை மட்டுமல்ல சுதந்திரத்தையும் நம்மை சுற்றி வாழும் உயிர்களுக்கு கொடுக்க வேண்டும் என்பதை இக்கதை நமக்கு உணர்த்துகிறது.




## எனக்கு ஒரு வீடு இருக்கிறது

### க்ளாடியா லெக்னாஸி

கற்பனைக்கு எல்லை இல்லை. கற்பனையின் மூலம் குழந்தைகள் அவர்களின் வாழ்க்கையிலும் சாதிக்க முடியும். கற்பனை இருந்தால் வேற்று கிரகத்திலும் நம்மால் வாழ முடியும், விண்வெளியையும் ஆள முடியும், நம் எண்ணமே நம்மை உயர்ந்த இடத்திற்கு எடுத்துச்செல்லும் என்பதனை இக்கதை குழந்தைகளுக்கு அழகாக விளக்கும் வகையில் உள்ளது.






## சிவப்பு லாரி, மஞ்சள் லாரி

### எஃப். வாட்டர்ஸ்

### சர்பக் திப்தாவின் கலை

நாம் பல்வேறு இடங்களுக்கு பயணம் செல்கிறோம். அருகில் உள்ள இடங்களுக்கு தரை வழி (பஸ், லாரி etc.,) பயணத்தையும் தூரத்தில் உள்ள நாடுகளுக்கு வான்வழி (ப்ளேன்) பயணத்தையும் பற்றி குழந்தைகளுக்கு எளிமையாக கூறும் வகையிலும் பல நிற வண்ணங்களை கற்றுகொள்ளும் வகையிலும் சிவப்பு லாரி மஞ்சள் லாரி கதை புத்தகம் அமைந்துள்ளது.




## ஒரு யானையின் எடையை எப்படிக் கண்டுபிடிப்பது?

### கீதா தர்மராஜன்

### சுஜாதா தாஸ் குப்தாவின் கலை

அனைத்து பெரிய சிக்கல்களுக்கும், கேள்விகளுக்கும் ஒரு தீர்வு உண்டு. அதுபோலவே இங்கு சிறுமி ஒருவர் எவராலும் கண்டுபிடிக்க முடியாத பிரச்சினைக்கு எவ்வளவு சுலபமாக விடையளிக்கிறாள் என்பதையும், அச்சிறுமி என்ன சாகச நிகழ்வினை செய்கிறாள் என்பதையும் இக்கதை விளக்குகிறது. புத்தி கூர்மைக்கு வயது தடையில்லை, சிறுவர்களாலும் சாதிக்க முடியும் என்பதை இக்கதை அழகாக எடுத்துரைக்கிறது.





இண்டிகோ தொகுப்பு

# என் உலகம்

20 – 120
சொல் கதைகள்




## விளையாடு

### சுனைனா அலி

### தெபஸ்மிதா தாஸ்குப்தாவின் கலை

மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் இருந்தால் உடலில் இருக்கும் குறைகள் எதுவும் குறையே அல்ல. அனைத்தையும் நம்மால் சிறப்பாக செய்து முடிக்க முடியும் என்பதனை குழந்தைகளுக்கு தன்னம்பிக்கை ஊட்டும் விதமாக விளையாடு என்ற இந்த கதை.




## நான் ராணி

### கீதா தர்மராஜன்

### கிரிஸ்டோஃபர் கோரின் கலை

மனிதர்களுக்கு மட்டுமல்ல விலங்குகளும் தன் மூதாதையர்களின் பழக்க வழக்கங்களை பின்பற்றுகின்றன என்று ராணியின் கதை உணர்த்துகிறது. குழந்தைகளுக்கு மிகவும் பிடித்த யானையின் மூலம் இக்கதை கூறப்பட்டிருப்பதே கதை ஆசிரியர் கீதா தர்மராஜன் அவர்களின் சிறப்பு அம்சம் ஆகும்.




## சோனமின் லடாக்

### மனீஷ் லக்கானி

நாம் வாழும் உலகம் நமக்கு கிடைத்த அரிய பொக்கிஷம். இதனை நாம் பேணி பாதுகாக்க வேண்டும். நாம் வாழும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு நம்மை நாம் தயார் படுத்திக் கொள்ள வேண்டும். பனிப்பிரதேசங்களில் வாழும் உயிரினங்களை காப்பாற்ற, உலகம் வெப்பமயமாதலை தடுக்க வேண்டும் என்பதனை இக்கதை நமக்கு அழகாக உணர்த்துகிறது.







## பெரிய பெரிய பெரிய திமிங்கலம்!

### கீதா தர்மராஜன்

### நிதிஷா மஹாபாத்ராவின் கலை

திமிங்கலம் மிக அறிய உயிரினம். இதை எல்லா இடங்களிலும் பார்க்கமுடியாது. இது அழிந்து வரும் உயிரினங்களில் ஒன்று. அதற்கு கடல் மாசுப்பாடே காரணம். இக்கதையின் மூலம் கடல் மாசுபாட்டால் திமிங்கலங்களுக்கு ஏற்படும் தீமைகளிலிருந்து அவற்றை எப்படி பாதுகாக்க வேண்டும் என்பதை பற்றி தெரிந்துக் கொள்வோம்.




## என் செல்ல கடிலா

### லிஸா நோரோன்ஹா

### அஞ்ஜோரா நோரோன்ஹா

நம் உடலில் உள்ள நிறம் என்பது இயற்கையாகவே அமைந்த ஒன்று.

தன் நிறத்தை வெறுக்கும் ஒரு கன்றுக்குட்டி, கடைசியில் தன்னுடைய நிறமே சிறந்தது என்று ஏற்றுக் கொள்கிறது. நமக்கானது எதுவோ அதை மன நிறைவோடு ஏற்றுக் கொண்டால் வாழ்க்கை மகிழ்ச்சியாக அமையும் என்பதை இந்த கடிலா கதை குழந்தைகளுக்கு ஒரு கன்றுக்குட்டியின் மூலம் எடுத்துக்காட்டுகிறது.




## எனக்கு பயமேயில்லை

### டேவிட் ஸ்ட்ரிப்ளிங்கின் கலை

நாங்கள் யாரைப் பார்த்தும் பயப்படுவது இல்லை. மனிதர்களாகிய நீங்களும் எங்களை பார்த்து பயப்படாதீர்கள். நீங்கள் எங்கள் மீது அன்பாக இருந்தால் நாங்களும் உங்களின் நண்பர்கள் தான் என்று விலங்குகள் கூறுவதை இந்த புத்தகத்தின் மூலமாக அறியலாம்.




## அம்புலி மாமா

### சர்பக் தீப்தாவின் கலை

நாம் நிலாவைப் பற்றியும், விண்வெளியின் மர்மங்களை பற்றியும், நமது நிலா பயணம் பற்றியும் கற்பனையோடு நம்மை அழைத்துச் செல்லும் அம்புலிமாமா புத்தகம்.




## எறும்பு சிறியது! ஆனால் பெரியது!

### கீதா தர்மராஜன்

### அடானு ராயின் கலை

இந்த கதையில் எறும்புகளின் சுறுசுறுப்பையும், அவை ஒற்றுமையாக இணைந்து சேமிக்கும் தன்மையின் சுவாரசியத்தையும் பற்றி கீதா தர்மராஜன் அவர்கள் எழுதியிருப்பதை இந்த கதையின் மூலம் நீங்கள் அறிந்து கொள்ளலாம்.




## அதிகம் குறைவு - குறைவு அதிகம்!

### கீதா தர்மராஜன்

### ஸூம்தியின் கலை

1900- ஆம் ஆண்டு இரண்டு கிராமங்கள் இருந்தன. அந்த கிராமத்தில் சில கட்டுப்பாடான முடிவுகள் எடுக்கப்பட்டன. இதன் விளைவாக அந்த கிராமத்தில் மக்கள் தொகை உயர்ந்ததால் ஏற்பட்ட பற்றாக்குறையை பற்றி இக்கதையில் அறிந்து கொள்வீர்கள்.






## மேகங்களும் அலைகளும்

### ரவீந்திரநாத் தாகூர்

### சுனைனா கோயெல்ஹோவின் கலை

மேகங்களாக மாறியது உண்டா?

அலைகளாக மாறியது உண்டா?

பல விசித்திரமான உருவங்களை பார்த்ததுண்டா?

கற்பனைக்கு எல்லையே இல்லை என்பதை இக்கதையில் நீங்கள் உணர்வீர்கள்.




## தொபக்கடீர்

### கீதா தர்மராஜன்

### வந்தனா பிஸ்டின் கலை

காற்று எங்கும் உள்ளது, எதிலும் உள்ளது. காற்றாக நாம் மாறும் பொழுது அனுபவிக்கும் சுவாரசியத்தை இக்கதை கூறுகிறது. ஒரு சிறுமி காற்றுடன் பயணம் செய்வதன் மூலம் அவள் அடையும் பேரின்பத்தை வந்தனா பிஸ்ட் அவர்கள் தன் கை வண்ணத்தினாலும், கலைநயத்துடனும் அழகாக விளக்கியுள்ளார்.




## குட்டனுக்குக் கொள்ளை மகிழ்ச்சி!

### ஸெரீன் காசிம்

### ஸோனல் பான்ஸேவின் கலை

குட்டி குழந்தைகள் எவ்வாறு தங்களை பெரியவர்களாகவும், தங்களுக்கு எல்லாம் தெரியும் என்பது போலவும் காட்டிக் கொள்கிறார்கள் என்பதை இக்கதையில் அழகாக ஒரு பூனைக்குட்டியின் வடிவில் கூறப்பட்டிருக்கிறது. தனக்கு தெரியாது என்பதனை கூட கூறாமல் தனக்கு தெரிந்த வார்த்தைகளை பயன்படுத்தி சாமர்த்தியமாக பதில் அளிக்கும் ஒரு குட்டி பூனையின் கதையாக குட்டனின் கொள்ளை மகிழ்ச்சி என்ற கதை குழந்தைகளை ஈர்க்கும் வகையில் உள்ளது.



நீல தொகுப்பு

# சாகசம்

80 – 200

சொல் கதைகள்




## துருவ கரடி

### நார்பர்ட் ரோஸிங்

நம் பூமியில் வாழும் ஒவ்வொரு உயிருக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று குழந்தைகளுக்கு இக்கதை வாயிலாக அறியலாம். துருவக் கரடிகள் ஏன் அழிகின்றன, அவற்றை எவ்வாறு பாதுகாப்பது என்பதை பற்றி குழந்தைகளை யோசிக்க செய்கிறது.




## நான் ஒரு பீல்!

### பூரிபாய்

நான் ஒரு பீல் என்ற கதை குழந்தைகள் தனக்குள் இருக்கும் திறமைகளை அறிந்து கொள்ள உதவுகிறது. அவர்களின் எதிர்கால கனவுகளை நோக்கி பயணிக்க சிறப்பாக வழிவகை செய்கிறது. குழந்தைகளுக்கு விளையாட்டு, ஓவியம், பசுமை போன்ற பல்வேறு துறைகள் பற்றி ஆர்வத்தை தூண்டுகிறது. குழந்தைகள் கதைகள் வாயிலாக லட்சியத்தை அடைய முடியும் என்பதை இப்புத்தகம் எடுத்துரைக்கிறது.




## தண்ணீர்

### ரஹீம்

### தஸ்னீம் அம்ருதீனின் கலை

இக்கதையில் தண்ணீரை அசுத்தம் பண்ணாமல் சுத்தமாக வைத்திருக்க குழந்தைகளுக்கு புரியும் வகையில் ரஹீம் என்ற கவிஞர் சிறப்பான முறையில் எழுதுகிறார்.






## மாயப் பச்சை

### கீதா தர்மராஜன்

### சர்பக் தீப்தாவின் கலை

மாயப்பச்சை என்ற புத்தகத்தின் வழியாக கீதா தர்மராஜன் குழந்தைகளுக்கு மரம் வளர்ப்பதன் அவசியத்தையும், மரத்திலிருந்து மனிதன் பெறும் நன்மைகளையும் பற்றி நகைச்சுவையான முறையில் எடுத்துச் செல்ல விரும்புகிறார்.




## யாரது யூகி?

### கீதா தர்மராஜன்

### ஓவியம்: கதா லேப் ஸ்கூல் குழைந்தைகள்

நம்மை சுற்றி பல அற்புதங்கள், அதிசயங்கள் கொட்டி கிடக்கின்றன. வண்ணமயமான பறவைகள், கம்பீரமான விலங்குகள், பூத்துக் குலுங்கும் சோலைகள், வானை நோக்கும் மலைகள், இவ்வளவும் யாரால் வந்தது? யோசி! யோசி! என்று குழந்தைகளை யோசிக்க வைக்கும் அற்புதமான கதையாக யாரது யூகி அமைந்துள்ளது.




## டைனோ!

### அகஸ்டோ மான்டர்ரோசோ

### ராஜீவ் ஐப்பின் கலை

பயம் என்பது உருவத்தை பார்த்து மட்டும் இல்லை என்பதை மிக அழகாக கூறியுள்ளார் அகஸ்டோ மான்டர்ரோசோ.




## நானும் என் நண்பனும்!

### ஆனனின் கலை


குடையைப் பற்றிய சுவாரசியமான அனுபவத்தையும் தகவலையும் இக்கதை நமக்கு அழகாக சொல்கிறது. குடையை நாம் வெவ்வேறு மொழிகளில் எவ்வாறெல்லாம் அழைக்கிறோம் என்பது பற்றியும் இக்கதையில் நாம் அறியலாம்.




## கீயின் நாய்

### ஆனன்| நிமிஷா ஸைக்கியாவின் கலை

இந்த கதையில் நேரத்தினை எப்படி சரியாக செலவிடுவது, எந்த நேரத்தில் எந்த விதமான செயல்களை செய்வது என்பதை ஒரு செல்லப் பிராணி சொல்வது போல் அமைந்துள்ளது. இதுபோலவே நாமும் நேர மேலாண்மையை கடைபிடிக்க வேண்டும் என்பதை பற்றியும் கூறுகிறது.




## பூமித்தாயே

### ஔவையார்| முரளி நாகப்புழாவின் கலை| மொழி பெயர்த்தவர் கீதா தர்மராஜன்

இந்த கதையில் கடவுளின் படைப்புகளை பிரம்மிக்க வைக்கும் விதமாக பூக்கள், செடிகள், மரங்கள், மலைகள் போன்றவை அமைந்துள்ளன. இயற்கையானது எந்தெந்த விதங்களில் அமைந்துள்ளது என்பதை விளக்கி ஆர்வத்தை தூண்டுமாறு ஒவ்வொரு படமும் அமைந்திருக்கிறது. இயற்கையானது நமக்கு எந்தெந்த வகைகளில் பாதுகாப்பு அளிக்கிறது என்பதையும், குழந்தைகள் இயற்கையை எப்படி ரசிக்கின்றனர் என்பதையும் அந்த இயற்கையை எப்படி பாதுகாக்க வேண்டும் என்பதையும் கூறுகிறது.






## நிறம்

### கீதா தர்மராஜன்| சபா ஹஸனின் கலை

நிறம் ஏன் முக்கியம்? எதற்காக கருப்பாகவும் வெள்ளையாகவும் மனிதர்கள் இருக்கிறார்கள் என்று யோசனை செய்கிறீர்களா?

அதற்கு என்ன காரணம், எதனால் இந்த மாற்றம் என்று தெரிந்து கொள்ளலாம். இந்த புத்தகத்தில் மனிதர்கள் வெப்பமான இடத்திலும் குளிர்ச்சியான இடத்திலும் எப்படி நிறம் மாறுகிறார்கள்? எதனால் மாறுகிறார்கள்? எந்த நிறமியால் நிறம் மாறுகிறது? நிறம் எந்த சூழ்நிலையை பொருத்து அமையும் என்று அறியலாம்.




## முதலை

### சங்கர்| அடானு ராயின் கலை

பூமி அனைத்து உயிர்களுக்குமானது. நாம் வளர்க்கும் செல்லப் பிராணிகளைப் போலவே நம்முடன் நேரடியாக சம்பந்தப்படாத மற்ற விலங்குகளையும் நேசிக்க வேண்டும். அதோடு விலங்குகளை துன்புறுத்தும் வகையில் நடந்து கொள்ளக்கூடாது என்றும் கூறி நம் ஆழ்மனதில் சிந்தித்து செயல்படும் வகையில் இக்கதை அமைந்துள்ளது.




## ஹைகூ

### கலா ரமேஷ்| ஸ்வாபு கோஹ்லியின் கலை

இரண்டு வரியில் பெரிய கருத்துக்கள் நிறைந்து இருக்கின்றன ஹைகூ கவிதைகளில். கடுகு போல் சிறிய கவிதை வடிவில் உலகளாவிய கருத்துக்களை சொல்ல வைக்க இடந்தரும் கவிதை வடிவே ஹைகூ.




## சிறுமியரே! சிறுவர்களே!

### சாந்தி கிருஷ்ணஸ்வாமி

### சுஜாதா சிங்கின் கலை

குழந்தைப் பருவம் என்பது ஒவ்வொரு மனிதரும் கடந்தே ஆக வேண்டிய ஒரு பருவம். குழந்தைகள் தங்களது குழந்தைப் பருவக் காலத்தில் பல்வேறு விதமான அனுபவங்களைப் பெறுகிறார்கள். குழந்தைகள் அடிப்படை உரிமைகளை பெற்று சுதந்திரமாக வாழ வேண்டுவதன் அவசியத்தை கூறுகிறார் சாந்தி கிருஷ்ணஸ்வாமி.



பச்சை தொகுப்பு

# என்னை உருவாக்குதல்

150 - 300
சொல் கதைகள்




## இனிமை

### டி. கிருஷ்ணா ஐயர்

### சர்பக் தீப்தாவின் கலை

இக்கதை இயற்கை நமக்கு தரும் பரிசு பற்றி உணர்த்துகிறது. காற்றின் வாசம், செடியின் வளர்ச்சி, வானத்தில் நகரும் மேகங்கள், மரத்தின் மூலம் கிடைக்கும் நிழல், அழகான இருட்டு, நம் பூமியில் இருந்து வரும் இயற்கை நறுமணம், காலையில் உதிக்கும் சூரியன் இவற்றை எல்லாம் நாம் பார்க்கும் போது நமக்கு கிடைக்கும் இனிமையான சந்தோசத்தை பற்றியது இப்புத்தகம்.




## உயரே பறக்க வேண்டும்!

### கீதா தர்மராஜன்

இந்த புத்தகம் குழந்தைகளுக்கு விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் அவர்கள் விண்வெளியில் எவ்வாறு பயணம் செய்தார் என்பதையும், அங்கு என்னென்ன விந்தைகள் நிகழ்த்தினார் என்பதைப் பற்றியும் விவரிக்கிறது. இந்த கதை குழந்தைகள் விண்வெளிக்கு செல்ல ஒரு தூண்டுதலாக இருக்கிறது.




## கண்ணாடியில் இருப்பது யார்?

### கீதா தர்மராஜன்

### சுகந்தோ தேபநாத்தின் கலை

நம் முகத்தை நம் கண்ணாடியில் பார்க்கும் போது அழுகையும் கோபமுமாக இருப்பது நமக்கு பிடிக்குமா? அல்லது நாம் எப்போதும் நம்மை மகிழ்ச்சியாக வைத்து கொள்வதை நம் மனம் விரும்புமா? நம்மிடையே நமக்கு அன்பு இருந்தால் தான் மற்றவர்களுக்கிடையே ஆன அன்பு மேம்படும் என்பதை கண்ணாடியை வைத்தே நமக்கு புரிய வைக்கிறது இக்கதை.






## ஆசை

### சர்பக் தீப்தாவின் கலை

ஒரு குழந்தை தன் லட்சியத்தை எவ்வாறெல்லாம் வகுத்துக் கொள்கிறது என்பதை குழந்தைத்தனம் மாறாத பண்போடு இக்கதை கூறப்பட்டிருக்கிறது. குழந்தைகளின் கனவுகள் எல்லையற்றது, அதை நாம் சரியாகப் புரிந்து கொண்டு அவர்களை சரியான இலக்கை நோக்கி வழி நடத்த வேண்டும் என்பதை இக்கதை உணர்த்துகிறது.




## உன்னியின் கதை

### முகுந்தன் | அடானு ராயின் கலை

இயற்கை நிகழ்வுகளை மாற்ற முடியாது. அழிவு என்பது அனைத்து உயிரினங்களுக்கும் பொதுவான ஒரு நிகழ்வு. செயற்கையான பொருட்கள் பார்க்க அழகாக இருக்கலாம். ஆனால் நிலையானவை அல்ல. இயற்கை நிகழ்வுகளை செயற்கையாக மாற்றும் போது உயிரினங்களுக்கும் பல பாதிப்புகள் ஏற்படலாம். இயற்கையில் மரம் உயிரினங்களுக்கு நிறைய நன்மைகளை தருகிறது. ஆனால் செயற்கையான மரம் உயர்ந்த வகை கண்ணாடியில் செய்யப்பட்டு இருந்தாலும் அதனால் யாருக்கும் எந்த பயனும் இல்லை.




## நாங்கள் வாழ இடம் வேண்டும்

### விஜயா கோஷ்

### சுமதியின் கலை

இருப்பிடம் என்பது அனைவருக்கும் எவ்வளவு முக்கியம் என்பதை இக்கதை நமக்கு உணர்த்துகிறது. மனிதர்களுக்கு மட்டுமல்ல விலங்குகளுக்கும், பறவைகளுக்குமே அவைகளின் இருப்பிடம் அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாகும். சுயநலமாக யோசிக்கும் மனிதர்களால் இன்று காடுகள் அழிக்கப்பட்டு வனவிலங்குகள் இருப்பிடம் இன்றி சுற்றித் திரியும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. இதனை இக்கதை அழகாக நமக்கு எடுத்துக் கூறுகிறது.




## அற்புத மூளை

### ஜோதி மிஸ்ரா| சுமதியின் கலை

நம் உடலில் உள்ள அனைத்து செயல்களையும் கட்டுபடுத்தி கட்டளையிடும் அரசனாக செயல்படுவது நமது மூளை ஆகும். மூளை எப்படி இயங்குகிறது? அதன் வடிவம் ஒரு விஷயத்தை நம் மூளை எப்படி ஞாபகம் வைத்து கொண்டு short term memory-லிருந்து long term memory கொண்டு செல்கிறது என்பதையும் மூளை இல்லாமல் நம் உடலில் எந்த செயலும் நடைபெறாது என்பதையும் மூளைத் திறன் குறைவாக உள்ளவங்களோடு மூளை எப்படி செயல்படும் என்பதையும் எளிமையான முறையில் அற்புத மூளை விளக்குகிறது.




## சந்தையில் கபீர்

### லினஸ் பாலின் கலை

நாம் வாழும் பூமியில் உள்ள அனைத்து உயிரினங்களும் அன்பை எதிர்பார்க்கின்றன. நாம் அன்பை கொடுக்கும் போது மட்டுமே அவைகள் பாதுகாப்பாக இருப்பதாக உணர்கின்றன. ஓரறிவு உயிரி முதல் ஆறறிவு உயிரினம் வரை அனைத்து உயிர்களிடத்தும் அன்பை பகிர்ந்து கொள்வது நம் தலையாய கடமையாகும். எந்த உயிரினங்களையும் துன்பப்படுத்தக் கூடாது என்பதை கபீர் அவர்கள் சந்தையில் கபீர் என்னும் கதையின் மூலம் எளிய வடிவில் விளக்கியுள்ளார்.




## விலை ஏற்றத்திற்கு காரணம் என்ன?

### கீதா தர்மராஜன்| சுதோசத்வ பாசு

கால சூழ்நிலை மாறும் போது விவசாயம் பல விதங்களில் பாதிக்கப்படுகிறது. மக்கள் தொகை பெருகல், குறைந்து வரும் விவசாயிகளின் எண்ணிக்கை போன்ற காரணங்களாலும், இடைத்தரகர்கள் மத்தியில் விலைவாசி எவ்வாறு உயர்த்தப்படுகிறது என்பதை பற்றியும் குழந்தைகளுக்கு புரியும் வகையில் சிறிய கிராமத்தில் நடக்கும் விஷயங்களை வைத்து குழந்தைகளை சிந்திக்க வைக்கிறது இக்கதை.






## ஹிக்! நீர்யானையின் கதை

### கீதா தர்மராஜன்| அடானு ராயின் கலை

ஒருவர் பிரச்சனையில் இருக்கும் போது பிரச்சனையை தீர்க்க நம்மால் முடிந்த உதவியை செய்ய வேண்டும் என்பதை கீதா தர்மராஜன் அவர்கள் அடானு ராயின் கலையின் மூலம் அழகாக எடுத்துரைக்கிறார்.




## சுற்றி திரியும் சிற்றெறும்பு

### சி. ஜே. டென்னிஸ்| கௌரி குப்தாவின் கலை

உலகத்தை சுற்றிப் பார்க்க நினைத்த எறும்பு எங்கெல்லாம் சுற்றித் திரிந்தது என்றும் அதோடு அனுபவங்களையும் நம்மோடு பகிர்ந்து கொள்ள ஆர்வத்தோடு இப்புத்தகத்தில் காத்துக் கொண்டிருக்கிறது.



KATHA

www.katha.org

1988 இல் நிறுவப்பட்ட KATHA, கல்வித் துறை, வெளியீடு மற்றும் சமூக மேம்பாட்டில் பணியாற்றும், எல்லோருக்கும் லாபம் தரும், தன்னார்வ அமைப்பு. அதன் அற்புதமான படப் புத்தகங்கள் மூலம் குழந்தைகளை இலக்கியத்தின் வண்ணமயமான உலகிற்குள் கொண்டுவருகிறது.

குழந்தைகளுக்கன தனது பல்வேறு புதிய செயல்பாடுகளிலிருந்து உத்வேகம் பெற்று, கதாகார், கதாவின் குழந்தைகள் இலக்கிய மையம், வாசிப்பின் மகிழ்ச்சியை அதிகரிக்கவும் இந்திய கதைசொல்லலின் பன்முக மரபுகளை தெளிவான மொழியில் குழந்தைகளுக்கு கொண்டுவரவும் பல எழுத்தாளர்கள் மற்றும் இல்லஸ்ட்ரேட்டர்களுடன் செயல்படுகிறது. எங்கள் புத்தகங்கள் பல்வேறு சமூகங்களிலும் கலாச்சாரங்களிலும் வளர்ந்த குழந்தைகளை ஆர்வம், அன்பு, படைப்புத்திறன் அனைத்தையும் பகிர்ந்து வளர்க்கும் இடத்துக்கு அழைத்துச் செல்கின்றன.

கதாவின் கல்வித் திட்டம் இந்தியாவின் தெருக்கள், சேரிகள் மற்றும் பழங்குடி கிராமங்களில் வசிக்கும் கிட்டத்தட்ட 100,000 குழந்தைகளை சென்றடைகிறது.

கதாவின் புத்தகங்கள் படப் புத்தகச் சித்திரங்களிற்கான நோமா கான்கோர்ஸில் எங்கரேஜ்மெண்ட் மற்றும் ரன்னர் அப் பரிசு, ப்ராடிஸ்லாவா பையென்னியலிலும் ஜப்பானில் நடக்கும் பையென்னியல் ஆப் ஏசியன் இல்லஸ்ட்ரேஷனிலும் மரியாதை குறிப்பு, ஆஸ்ட்ரிட் லிண்ட்க்ரென் விருதுக்கான பரிந்துரை போன்ற பல விருதுகளும் அங்கீகாரங்களும் பெற்றுள்ளன. கதா சித்திரகலா விருது என்பது குழந்தைகளுக்காக எழுதுவதையும் இல்லஸ்ட்ரேட் செய்வதையும் போற்றி பாராட்ட விளங்கப்படுகிறது.




எங்கள் புத்தகங்களை ஆர்டர் செய்யுங்கள்

books.katha.org

கதா, A3, சர்வோதயா என்கிளேவ், ஸ்ரீ அரவிந்தோ மார்க், புது தில்லி 110 017, இந்தியா

+91 98946 31636 | marketing@katha.org